முதலாளித்வத்திற்கு முலாம் பூசுகிறார் ட்ரூமன்

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (26—4—50) வெளியூர் (27—4—50) [இதழ் 236

ஜனநாயக அடிப்படையில் கம்யூனிசத்தை எதிர்க்கிறார்களாம்!

—(0)—

"அமெரிக்க ஆட்சித்திறனும் அழகும் காண வாரீர்" என்கிறார்

கம்யூனிசத்தை எதிர்க்க அமெரிக்க தலைவரின் சாகசத்திட்டங்கள்

'மூன்று வழிகளில் நாம் கம்யூனிசத்தைத் தாக்க திட்டமிட்டுள்ளோம்.

1. நம்முடைய தற்காப்பு முறைகளைப் பலப்படுத்துவதும், மற்ற சுதந்திர நாடுகளுக்கு உதவி அளிப்பதன் மூலம் அவை கம்யூனிஸ்டுகளின் படையெடுப்பைச் சமாளிக்க வழி காட்டுகிறோம்.

2. நம் நாட்டு மக்களுக்கும், உலகின் மற்றப் பகுதியில் வாழும் மக்களுக்கும் ஜனநாயகத் தத்துவத்தை விளக்கிக் காட்டும் முறையில், நாம் நமது ஜனநாயகத்தை வளர்த்து வருகிறோம்.

3. ஜனநாயக அடிப்படையிலும், நமக்குள்ள சுதந்திர எல்லைக்குட்பட்டும் அமைதியாகவும் கம்யூனிஸ்டுகளின் நாசவேலைகளைச் சமாளித்து வருகிறோம். அதைககண்டு நாம் அஞ்சவோ, ஆர்ப்பரிக்கவோ இல்லை.'

என்று அமெரிக்கத் தலைவர் தோழர் ட்ரூமன், அண்மையில் குடியரசுக் கட்சியினரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் முறையில், வழக்கறிஞர் கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:—அமெரிக்காவை எதிர்நோக்கியிருக்கும் பேராபத்தானது உள்நாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படுவதல்ல. கூச்சலிட்டுக்கொண்டிருக்கும் ஒரு சிறிய ஆனால், எங்கும் பரவியுள்ள ஒரு சிறு கும்பலின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்

கம்யூனிசம் மற்ற சுதந்திர நாடுகளெங்கும் பரவி, இறுதியில் நம்மைத் தாக்க தயாராகிக்கொண்டிருக்கிறது.

நம் நாட்டைப் பொறுத்த வரையில், கம்யூனிசம் ஒரு பெரிய எதிர்ப்புச் சக்தியாக இல்லையாயினும், எந்த விதத்திலும் அச்சக்தி வளர நாம் இடங்கொடுக்கவில்லை. எங்கெங்கே கம்யூனிஸ்டுகளின் சதிவேலைகள் உள்ளனவோ, அங்கெல்லாம் அவற்றை அடித்து நொறுக்கி, மட்டந்தட்டிக்கொண்டே இருக்கிறோம்.

சட்டத்தின் உதவிகொண்டு கம்யூனிஸ்டுகளை அடக்கி வருகிறோம். இதுகாறும் எந்தக்கம்யூனிஸ்டு சதிவேலையும் கண்டு பிடிக்கப்படாமல் தவறியது கிடையாது.

இன்றைய சர்க்கார் சம்பளப் பட்டியில் ஒரு கம்யூனிஸ்டோ அல்லது, சர்க்காருக்கு அடங்கி நடவாத மனிதனின் பெயரோ இடம் பெறவில்லை.

ஆனால், இடதுசாரிகளுக்கு எதிராக நாட்டை வலதுசாரிகள் நாடாக மாற்றிவிடப் போவதில்லை.

கம்யூனிசத்தை எதிர்க்கத் திட்டமிட்ட தோழர் ட்ருமனின் பேச்சின் சாரம் இதுதான்.

ட்ருமனின் பேச்சில், ஒவ்வொரு அடியிலும் ஜனநாயக மணம் கமழுகிறது. அதே நேரத்தில் பேச்சின் அடிவாரத்தில் வஞ்சகம், சூது, சூழ்ச்சி இன்னபிற இயல்புகள் படிந்துள்ளன.

தற்காப்பு முறைகள் நன்றாக அமைந்துள்ளன; அயல் நாடுகளுக்கு உதவி அளிக்கும் முறையுஞ் சரிவர நடைபெறுகிறது என்று சொல்லும் அதே நேரத்தில், இவை அத்தனையும் கம்யூனிச எதிர்ப்பு முன்னணியே என்பதையும் தெளிவுபடக் கூறுகிறார் ட்ருமன்.

உள்நாட்டில் கம்யூனிஸ்டுகளைப் பற்றிய பயமில்லையாம். ஆனால் ஏதோஒருசிறிய ஆனால் சர்வவியாபியாக உள்ள ஒரு கூட்டத்தின் கூச்சலைக் கேட்டுத்தான் பயப்படுகிறாராம்!

'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்பதுபோல சிறிய கூட்டந்தானும், ஆனால் அதன் கூச்சல் கேட்டு மாத்திரம் பயப்படுகிறாராம்; அச்சிறு கூட்டத்தை அடக்க ஆவன செய்கிறாராம். அதே சமயத்தில் மற்றொரு புதுமையையும் கேளுங்கள்; இடதுசாரிகளை ஒழித்துவிட்டு, அசல் வலதுசாரிகளின் ஆட்சியை நிலவச் செய்வது அவரது நோக்கமல்ல என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்.

ஏன் இவ்வளவு வளைவு, நெளிவு, குழைவு?

சிறு கூட்டம் என்று தோழர் ட்ருமனால் கருதப்படும் கூட்டம் எப்படி அங்கெங்கெனாதபடி எங்கும் பரவிற்று? அத்தகைய சிறு கூட்டத்துக்கு உலக மக்களின் ஆதரவு எப்படிக் கிடைத்தது-கிடைத்து வருகிறது? அச்சிறு கூட்டத்தை எதிர்க்க ஏன் இத்தனை பெரிய அளவில்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

மதங்கள் அனைத்துக்கும் சட்டம் பொதுவாதல்வேண்டும்

—(0)—

குற்றங்கண்டவிடத்து சுட்டிக்காட்டலே வழக்கறிஞர் கடன்

—(0)—

நீதிபதி கோவிந்தமேனன் கருத்துரை

'சட்டம் எப்படிப்பட்டதாய் இருப்பினும், அதுஒருசமஸ்தானத்தைப் பொறுத்த அளவில் ஒரே விதமாக இருக்க வேண்டும்.

இந்துக்களுக்கு ஒரு சட்டம், கிறிஸ்தவர்களுக்கு ஒரு சட்டம், முஸ்லிம்களுக்கு ஒரு சட்டம் என்ற நிலை கூடாது. எல்லா மதத்தினரும் ஒப்புக் கொள்ளும் முறையிலே, ஒரே விதமான சட்டம் செய்தல் வேண்டும். ஏனெனில், நமது ஆட்சி முறை மதச்சார்பற்ற ஆட்சிமுறை என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஆட்சி முறையில், மதவேற்றுமைகள் இருப்பது முறையல்ல"

என்று பாலக்காடு வழக்கறிஞர் கழக மணி விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய நீதிபதி கோவிந்த மேனன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:—

ஆட்சியாளரிடம் காணப்படும் குற்றங்குறைகளை நன்கு எடுத்துக்காட்ட வேண்டுவது வழக்கறிஞர் கடன்.

நீதிமன்றங்களில், வழக்குகளின் தன்மைக்கேற்பவழக்கு ஸ்டாம்பு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது நம் நாட்டில் கிழக்கிந்திய கம்பெனி இருந்த காலத்தில் ஏற்பட்ட முறை.

கிழக்கிந்திய கம்பெனியார் வர்த்தகமனம் படைத்தவர்களாகையால், நிறைய பணம் திரட்ட இம்முறையைக் கையாண்டார்கள். ஆனால், அது இன்றைக்கு உதவாது வழக்குக்கு ஏற்ற வண்ணம் 'ஸ்டாம்பு' கட்டணம் வசூலிப்பது நீதியை விற்பது போலாகும்.

எனவே, வழக்கு எப்படிப்பட்டதாயினும், குறைந்தளவு ஒரேவித கட்டணம் விதிப்பதே நல்லது வேண்டுமானால் வழக்கு அதிகநாள் நீண்டால், அதற்கேற்ப கட்டணம் வசூலிக்கலாம்" என்றும் பேசினார்.

ஆரியமாயை வழக்கு

மீண்டும் ஒத்திவைப்பு

திருச்சி, ஏப். 25—

'ஆரியமாயை' என்ற புத்தகத்தை எழுதியமைக்காக, தோழர் சி. என். அண்ணாத்துரை மீதும், அச்சிட்டு வெளியிட்டமைக்காக திராவிடப் பண்ணையாளர்மீதும் தொடுக்கப்பட்ட வழக்கு 24—4—50-ல் எடுத்து, 8—5—50-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என அறியப்படுகிறது.

அரபு பாலஸ்தீனம் ஜார்டனுடன்இணையும்?

லண்டன், ஏப். 25—

இன்னும் சில தினங்களில் ஜார்டன மன்னர் அப்துல்லா, ஜார்டனுடன் அரபு பாலஸ்தீனம் இணைந்துவிட்டதென்பதை உத்யோகபூர்வமாக அறிவிப்பார் என்று, கெய்ரோவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

இதை அரபு லீக் எதிர்க்கிறது. சமீபத்தில் நடந்த கெய்ரோ கூட்டத்திலும் அரபு லீக் தன் எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது.

அரபு பாலஸ்தீனம ஜார்டனுடன் சேருவதன்மூலமதான், அப்பிரதேசத்திற்குப் பாதுகாப்பு ஏற்பட முடியும என்று சில அரபு விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

திபேத்திற்கு விமான வசதி?

லண்டன், ஏப். 25—

லாசாவிற்கு மின்சார சாதனம் அமைப்பதற்காக காலிம்பாங் வரையில் வந்த டிமிட்ரி ரெட்பாய்ரய் என்கிற வெள்ளை ரஷ்ய எஞ்சினியர், திபேத் மீது சீன கம்யூனிஸ்ட் படையெடுக்கலாம் என்றுள்ள நிலைமையை உத்தேசித்து நேராக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுவிட்டார்.

திபேத்திற்கு விமானவசதி ஏற்படுத்தித்தர ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி முன்வந்திருப்பதைக் குறித்து, திபேத சர்க்கார் ஆலோசித்துவருகின்றனர்.

கெய்ரோ-ஜெருசலம் விமான சர்வீஸ்

அம்மான், ஏப். 25—

பாலஸ்தீனம செல்ல விரும்பும் யாத்ரீகர்களுக்காக கெய்ரோ-ஜெருசலம் விமான சர்வீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு மாதத்திற்குமட்டுமே நடைபெறும்.

கெய்ரோ (ஜெருசலத்திற்கு வடக்கிலுள்ள) கலாண்டியா நிரந்தர விமான சர்வீஸ், சீக்கிரமே ஆரம்பமாகவிருக்கிறது என்று கூறப்படுகிறது.

ரஷியா-பின்லந்து ஒப்பந்தம் உருவாகிறது

—(0)—

பால்டிக்கில் அமெரிக்க விமானம் தோன்றியதன் விளைவு

லண்டன், ஏப் 25—

பால்டிக்கில் அமெரிக்க விமானம் ஆபத்து ஏற்படும் நிலைமை இருந்துவருகிறதென்றும், ஆகவே இது விஷயமாக பின்லாந்தும், ரஷியாவும் கலந்தாலோசனை செய்ய வேண்டும் என்று ரஷ்யா அழைத்திருப்பதாகவும் தெரிகிறது

பின்னிஷ்-ஸோவியத் பாதுகாப்பு உடன்படிக்கையின் இரண்டாவது ஷரத்தின் பிரகாரமே, ரஷ்யா இந்த யோசனையை வெளியிட்டிருக்கிறது.

அந்த ஷரத்தில் ஜெர்மனியினாலோ அல்லது அதைச் சேர்ந்த இதர நாடுகளினாலோ படையெடுப்பு அபாயம் ஏற்படும போலிருந்தால் பின்லாந்தும், ரஷ்யாவும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவின் இந்த யோசனையின் அடிப்படையில், ஏதே விஷம நோக்கம் இருக்கவேண்டும் என்று வாஷிங்டன் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 26—4—50 புதன்கிழமை

இந்தியோ இந்தி!

தோலைக் கடித்துத், துருத்தியைக் கடித்து, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, பின் மனிதனையும் கடிப்பதைப் போல், இந்தி, தமிழகத்தின் தாய் மொழியாம் தமிழைக் கடிக்கத் தொடங்கிவிட்டது!

கடிக்கத் தொடங்கிவிட்டது என்றால், கடிப்பதற்கு முழு உரிமையும், பாதுகாப்பும் சென்னை அரசியலாரிடமிருந்து, அந்த 'இந்தி' பெற்றுவிட்டது என்பதாகும்!

இந்தி, தமிழைக் கடிக்கத் தொடங்கிவிட்டது என்றால்; தமிழரின் பண்பாட்டை—வாழ்வை—வளர்ச்சியை—செல்வாக்கை அரிக்கத் தொடங்கிவிட்டது என்பது பொருளாகும்; தமிழின் மேன்மையை—பெருமையை—புகழை—அதன் வளத்தை—அதன் வளர்ச்சியை—அதன் இலக்கியசெல்வத்தை—அதற்கிருக்கும் கொஞ்சநஞ்ச ஆட்சியை அழிக்கத் தொடங்கிவிட்டது என்பது கருத்தாகும். இளம் தமிழ் மாணவர்களின் இளகிய உள்ளத்தில் அரும்பெடுக்கும் தமிழ்க்கொழுந்தை கருகவைக்கத் திட்டம் தீட்டப்பட்டாகிவிட்டது, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டாகிவிட்டது என்பது பொருளாகும்!

தமிழ்ப் பயிரை இந்தி எனும் எருமை மேயத்தொடங்கி விட்டது! பாடசாலைகளில், முதல் படிவத்திலிருந்து, ஆறும் படிவம் வரையிலுமுள்ள எல்லா வகுப்புகளிலும், இந்தி எருமை தாராளமாக மேயலாம்.—அல்ல கட்டாயம் மேய்ந்தே தீரவேண்டும் என்ற கட்டளையைச் சென்னை மந்திரிசபை பிறப்பித்துள்ளது! எருமையை அழைத்துவிடுவதற்கு சம்மதம் அளித்துள்ளவர்கள், தமிழைத் தன்னால் இயன்றமட்டும் அலட்சியப்படுத்தும் மந்திரி மாதவமேனன் மட்டுமல்ல, தமிழைக் காக்கும் பண்புடையோர் என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்ளும் தமிழ் மந்திரிகளும் சிலர் இருக்கிறார்கள்! தாய்மொழிக்கு கேடு சூழும் செயலைச் செய்யும் இழிதகைமையோர், இங்கு மந்திரிகளாகவும் வரக்கூடும் என்ற நியதி இருக்கும் போது; இது மட்டுந்தானா இங்கு நடைபெறும். இன்னமும் பல நடைபெறக்கூடும்! நாடு அத்தகைய "விசித்திரப் பிறவி"களையும் கொண்டிருக்கிறது! என் செய இயலும்!

உயர் நிலைப்பள்ளிகளில் இந்தி இனிமேல் **கட்டாயப் பாடந்தான்!** முதல் படிவத்திலிருந்து ஆறும்படிவம் வரையிலும் இந்தி கட்டாயப்பாடமாக இருந்தே தீரும்! இது இன்றைய மந்திரி சபையின் கட்டளை! இதற்கு அனமுயற்சி எடுத்து பல னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும்,

இப்பொழுதுதான் அமைச்சர் குழுவுக்கு அந்தத் துணிச்சல்—இந்தியைக் கட்டாயமாக்கும் துணிச்சல் ஏற்பட்டிருக்கிறது! 'இந்தியைக் கட்டாயமாக இளம் மாணவர்கள் மீது திணிக்கும் எண்ணம் எமதிடத்துக் கிடையாது; இந்தியை இஷ்ட பாடமாக்கும் நோக்கமே எங்களது திட்டம்" என்று இது நாள்வரையில் கூறிவந்த அமைச்சர்கள் தாம் இன்னும் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள்!

அவர்கள் சொல்லிலும் ஏமாற்றுந்திறம் எவ்வளவு ஏராளமானதாக நிரம்பிக்கிடக்கிறது என்பது இதனால் தெளிவுபெற்றாலும், அவர்களுக்குத் துணிச்சல் ஏற்பட்டிருப்பது ஆச்சரியத்திற்குரியது தான்! இவர்களின் ஏமாற்று எண்ணத்தைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம், அவ்வப்போது வெட்ட வெளிச்சமாக்கினோம்; அதற்காக அரசாங்கத்தாரின் கொடுந் தண்டனைகளுக்கு உள்ளானோம்; இதை நாடு நன்கு அறியும்! இந்தியை இவர்கள் இஷ்டபாடம் என்ற பெயரில் கொண்டுவந்து, ஏதேதோ பொய்மொழி பேசினின்ற காலை, நாம் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தினோம், இது ஏமாற்றும் வித்தை இந்தியை மறைமுகமாகக் கட்டாயமேயடுத்தியுள்ளனர் என்று. நமது அந்தக் கூற்று இப்பொழுது உண்மையாகிவிட்டதை உலகு நன்கு அறியக் கூடும்.

தமிழையும், தமிழரின் வாழ்வையும் சீர்குலைக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு இந்தித் திட்டத்தைச் சூதுமதியினர் இந்த நாட்டிலே புகுத்தினர். இந்த நாட்டைச் சேர்ந்த ஏமாளிகள் அந்தத் திட்டத்தின் சூழ்ச்சியை அறிந்து கொள்ள வகையற்று, அதனை ஏற்று நடத்த முற்பட்டனர். அப்படிப்பட்ட சூதுமதியினரும், ஏமாளிகளுமே ஆட்சிப் பீடத்தில் இன்று அமர்ந்திருப்பதால், அதிகாரத்தின் பலத்தை நம்பி இந்திக் கட்டாயத் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்துள்ளனர், இந்திய அரசாங்கத்தை நம்பி, அதற்குள்ள ஆயுத பலத்தை நம்பி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துக்களை நம்பி, தம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரம் போலீஸ்படை, சட்டம், தண்டனை, சிறை ஆகியவைகளை நம்பி இந்தியை எதிர்ப்பவர் இனி எவரும் இருக்கமாட்டார்கள் என்ற ஏமாளி எண்ணத்தை நம்பி, சென்னை அரசியலார் இந்திக் கட்டாயப்பாடத் திட்டத்தைத் துணிவோடு கொண்டுவந்துள்ளனர்! துணிச்சல் ஏற்பட்டிருக்கிறது; அது எத்துணை நாட்களுக்கு நிலைத்து நிற்கப்போகிறது—நிலைத்துநிற்க முடியுமென்பதை

அமைச்சர்கள் இன்னமும் கணக்கிட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை! மக்கள் எத்துணை நாட்களுக்குத்தனை நிலைத்துநிற்கவிடப் போகிறார்கள் என்பதை விரைவிலே காட்டுவார்கள்! அதன் பிறகுதான் அமைச்சர்களுக்கு அந்தக் கணக்கு விளங்கும்

ஆச்சாரியார் அன்றொரு நாள், இந்தி எருமையை ஓட்டிக்கொண்டு வந்தார் வரும்போது ஆணவம்—அகங்காரம்—அதிகாரம்—ஆசிக்கும்—ஆயுத அணைப்பு—தண்டனை—சிறைஇவைகளையெல்லாம் உடன் அழைத்துக் கொண்டுதான் வந்தார். ஏழும் பிற்றுகாண் தமிழர் சிங்கக் கூட்டம், என்று வீரத்தமிழர்களும், வீராங்கனைகளும் மொழிப் போராட்டத்தில் வீறுடன் ஈடுபட்டனர். ஆச்சாரியாரின் உடன்வந்த அத்துணையும் தவிடுபொடியாயின. ஆடி அடங்கினர் ஆச்சாரியார்!

அந்த ஆணவம் மீண்டும் ஆச்சாரியாரிடத்தில் இப்பொழுது அரும்புவிடத் தொடங்கியுள்ளது! எவரிடத்திருந்தும் எதிர்ப்பு வராது எவரும் எதிர்க்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில், ஆச்சாரியார் ஆணவத் தெப்பத்தில் சிறிது நேரம் மிதந்து பார்க்க ஆசைப்படுகிறது! சூறைக் காற்று வீசத் தொடங்கின், தெப்பம் என்ன ஆகும் என்பதை ஆச்சாரியார் அப்பொழுது உணர்ந்துகொள்வார். சூறைக் காற்று வீசப் போவதிலேயே ஆச்சாரியாரும் அவரது அடிப்பொடி ஆழ்வார்களும் சந்தேகங்கொள்ளுகிற காரணத்தால்தான். ஆணவமும், துணிச்சலும் அந்த அளவுக்கு அவர்களிடத்தில் குடியேறியுள்ளன! ஆச்சாரியாரின் சந்தேகத்தைத் தீந்தமிழத் திராவிடர்கள் அழித்துக் காட்டப் போகிறார்களா? அல்லது அளித்துக் காக்கப் போகிறார்களா? என்பது இனி அவர்கள் எடுக்கப் போகும் நடவடிக்கையிலிருந்து தெரிய வேண்டும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வடமொழி, தமிழின் மீது படை எடுத்தது, தமிழர் ஏமாந்தனர்; தமிழன் நலம் பாழ்படுத்தப்பட்டது! இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலம் படையெடுத்தது; தமிழர்கள் ஏமாந்தனர்; ஆங்கிலம் தமிழின் பண்பாட்டையும் வளத்தையும் கெடுக்காவிட்டாலும் ஆதிக்கங் கொள்ளத் தலைப்பட்டது! இப்பொழுது இந்திப் படையெடுப்பு, இப்பொழுதும் ஏமாந்து போவார்கள் தமிழர்கள் எனின், எதிர்காலத்தில் தமிழும் அது வளர்த்த நாகரிகமும் செத்து மடியும் என்பதில் ஐயமில்லை! இப்பொழுது மூன்று மொழிகள் தமிழை அடிமைப்படுத்துகின்றன. வேண்டிய மட்டிலும் அடிமை கொள்ள அமைச்சர் குழு அவைகளுக்கு அனுமதி அளித்திருக்கின்றன!

இப்பொழுது அகில உலக மொழியாக விளங்கும் ஆங்கிலத்தின் நட்பு—அணைப்பு சிறிதளவு தமிழகத்தின் தாய்மொழியான தமிழுக்கு இருத்தல் வேண்டும். அவ்வளவுதான்! வடமொழியோ, இந்தியோதமிழகத்திற்குத்தேவையில்லா மொழிகள்— தமிழை அடிமைப்படுத்தவந்தமொழிகளாகும். அவைகளை விரட்டியடித்துத் துரத்தும் வேலையை இந்நாட்டு மக்கள் பலநாட்களுக்கு முன்பே ஏகோபித்துக் கொண்டிருந்தால், இவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டிரா தமிழுக்கு! தமிழகத்துக்குத்

தாய்மொழியாம் தமிழ் அதுவே எல்லாத்துறைகளிலும் ஆட்சி புரியவேண்டும்; ஆங்கிலம் அதற்கு அணைப்பாக—உதவியாக இருந்து வரவேண்டும். இந்நிலையே மற்ற திராவிடக் குழுமொழிகள் நிலவும் பகுதிகளிலும் இருக்கவேண்டும். வடமொழி வேண்டாம்; இந்தி வேண்டவே, வேண்டாம்!

இந்தி திராவிடத்தில் வேரூன்றத்தொடங்கிவிட்டால்தொடர்ந்து வரும் பல காலங்களுக்கும் திராவிடம், வடநாட்டிற்கு அடிமைப்பட்டே தீரவேண்டும். அந்த ஆபத்தினின்றும் இன்பத் திராவிடத்தைக் காப்பாற்ற தீர திராவிடர்கள் இப்பொழுதே கிளம்புதல் வேண்டும். "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள திராவிடர் ஒன்றுதல் கண்டே" என்ற நிலையும், முழக்கமும் ஏற்படும்படி திராவிடச் சிங்கங்கள் மொழிப்போராட்டத்துக்குக் கிளம்புவார்களாக!

பாசறை காணவும், படை வரிசை அமைக்கவும், களம் செல்லவும், 'கலங்கா நெஞ்சத்தோடு களம் போரிடவும், நெஞ்சிறைவாழ்வு கிடைத்தால் அது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று கூறிடவும், மரணம் அணைக்கவந்தால், அன்புடன் ஏற்றுக் கடமையை ஆற்றினோம் என்ற களிப்போடு தழுவிக்கொள்ளவும் வீரர்களும், வீராங்கனையரும் திராவிடத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் திரண்டு எழுவார்கள் என்பது உறுதி! அந்நாள் அதிக தொலைவிலில்லை என்பதை சென்னை அமைச்சர் குழுவுக்கு அறிவுறுத்துகிறோம்!

விடுதலை வேட்கை உணர்ச்சி கொண்டோர் திரண்டெழுந்துவிட்டால், அந்தவிடுதலைப்போராட்டப் படையின் முன் நிற்கும் ஆற்றல் எதுவும் இருக்க முடியாது. அப்படிப்பட்டபடை திராவிடத்து எழுந்துவிட்டால், பின்னர் "இந்தியோ இந்தி" தான்! அந்தப் படையைக் காண திராவிடர்கள்—தமிழர்கள் கிளர்ந்தெழுவார்களாக!

கூட்டுறவு முறையில் படத் தொழில்

பிரிட்டிஷ் பிலிம் டெக்னீஷியர்கள் புது கூட்டுறவு முறையில் சொந்தத்தில் படம் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர்.

படத் தயாரிப்புக்காகும் செலவில் பாதியை இவர்கள் தங்கள் பணத்தைப்போடுவார்கள். மற்றப் பாதி சர்க்காரிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

இப்படத் தயாரிப்புபற்றிய ஆலோசனைக்கு, பிரபல நடிகர் லாரென்ஸ் ஆலிவியர் அளிப்பார் பிரிட்டிஷ் பிலிம் டெக்னீஷியன்கள் சங்கத்தில் சுமார் 8000 மெம்பர்கள் இருக்கிறார்கள். அருங் கலைப் புதுப்படங்கள் எடுப்பதற்காக ஊக்கப்படுமோம்.

ரஷ்யா அதிகமாக ரப்பர் வாங்குகிறது

லண்டன், ஏப். 25—

மலேயா ரப்பரை ரஷ்யா ஏராளமாக வாங்குகிறது என்றும், இதனால் தொழிலாளர்கள் ரப்பர் வாங்க வசதியில்லாமல் போகிறதாக அமெரிக்கர்கள் புகார் செய்வதாக பிரிட்டிஷ் பத்திரிகை ஸ்டாண்டர்ட் கூறுகிறது

வாஷிங்டன் செய்தியை, சென்ற மாதத்தில் ரஷ்யா 10559 டன் ரப்பரை மலேயாவிலிருந்து வாங்கியிருப்பதாகவும், இம்மாதம் 15000 டன் வரை ரப்பர் வாங்கப்படலாம் என்றும் தெரிய வருகிறது.

ஹாலிவுட் திரும்பமாட்டாராம்

லண்டன், ஏப். 25—

ஆகாகானின் மருமகள் பிரபல நடிகை ரீடா ஹேவொர்த் இனிஹாலிவுட் திரும்பமாட்டார் எனத் தெரிகிறது

ரீடாவின் ஹாலிவுட் வீட்டை விற்று விடும்படி ஆகாகானுக்கு பல பந்தயக் குதிரைகளை விற்றுள்ள சார்லஸ்மெக்ஸ்ரூகலி கான் அறிவித்திருப்பதாக வியூயார்க் செய்திபோல் கூறுகிறது

கல்லூரிகளுக்கு அதிக இடவசதி அளிக்க ஏற்பாடு

—(0)—

சென்னை சர்க்கார் கட்டிட திட்டங்கள்

சென்னை, ஏப். 25—

சென்னை சர்க்காரால் சுமார் ரூ. 5,00,000 செலவில் கட்டப்படும் கோயமுத்தூர் ஸர் ஆர்தர் ஹோப் என்ஜினீயரிங் கல்லூரி, கூடியசீக்கிரம்முடிவடையுமென்றும், இந்த ஜூலை முதற்கொண்டே வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

சைதாப்பேட்டை "டாட்ஹண்டர்" நகரில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு கட்டப்படவிருக்கும்சுமார் 50 வீடுகள், கூடிய சீக்கிரம் அஸ்திவாரம் எழுப்ப சர்க்கார் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கும் இதர கட்டிடங்களின் விவரங்கள்:—

சுமார் ரூ. 2,50,000 செலவில் கும்பகோணம் சர்க்கார் ஆர்ட்ஸ் கல்லூரிக்கு மற்றொரு கட்டிடம், பாலக்காட்டு விக்டோரியா கல்லூரிக்கு ரூ. 2,00,000 செலவில் ஒரு புதிய விஞ்ஞான பிளாக்; அனந்தபூர் ஆர்ட்ஸ் கல்லூரிக்கு சுமார் ரூ. 1,00,000ல் மற்றொரு கட்டிடம; ஹோஸூர் கால்நடை ஆராய்ச்சி ஸ்டேஷன் மாணவர் ஹாஸ்டல் சுமார் ரூ. 1,50,000 செலவில்; கள்ளிக்கோட்டையிலும், மங்களூரிலும் 'பாலிடெக்னீக் இன்ஸ்டியூட்," கட்டிடங்கள் ஒவ்வொன்றும் ரூ' 5,00,000 செலவில் எழுப்பப்படும்.

அட்லாண்டிக் தீவில் ஆராய்ச்சி

லண்டன், ஏப். 25—

அட்லாண்டிக் தீவானஸ்டோனிங்டன் தீவில் இரண்டு வருஷ காலம் ஆராய்ச்சி செய்த பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் லண்டன் திரும்பியிருக்கின்றனர். இவர்கள் தங்கள் ஆராய்ச்சி பற்றிய விஸ்தாரமான ரிப்போர்ட் ஒன்றை தயாரித்து, பிரிட்டிஷ் காலனி ஆபீஸிக்கு சமர்ப்பிப்பர் என்று தெரிகிறது. இவர்கள் கேம்பிரிட்ஜைச் சேர்ந்த டாக்டர் விவியன் ப்யூ தலைமையில் சென்றிருந்தனர்.

இவர்கள் தாங்கள் கொண்டிருந்த உணவுப் பொருள் தவிர வேறு மாமிசம், பெங்குவின் பறவைகளின் முட்டைகள்முதலியவைகளை உண்டனராம்.

ஒரு பெங்குவின் பறவையின் மாமிசம் 48 பேர்களுக்கு உணவுக்கும் போதுமாம் அன்சார்டிக் பிரதேசத்தில் மிக மிக உஷ்ணமான நிலைமை 45 டிகிரியாகும்.

‘தாத்தா’வை மணந்துகொள்ளமாட்டேன்?

(௳)

பொலிவியா மங்கையின் மறுப்பு

நியூயார்க், ஏப். 25

அமெரிக்காவுக்கு வந்துள்ள ஒரு பொலீவியா மங்கை, தன் நாடு திரும்பமறுத்து அமெரிக்காவிலேயே தங்கிவிட உதவி செய்யும்படி, அமெரிக்க அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

6-மாதம் அமெரிக்காவில் தங்க அனுமதிக்கும் பாஸ்போர்ட் காலாவதியாகிவிட்டதால் அவர் அதிகாரிகளிடம் எப்படியும் தன்னை அங்கு தங்கும்படி அனுமதிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

ஏன், தான் நாடு திரும்ப விரும்பவில்லை என்ற காரணத்தை அவர் விளக்குகையில், அவளுடைய குடும்ப வழக்கம், தகப்பனார்தான் பெண்ணுக்கு வரன் நிச்சயம் செய்வது வழக்கமென்றும், மிகவும் வயதான ஒருவரின் மனைவியாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதற்கு தான் இஷ்டப்படவில்லை என்றும் கூறினர்

ஒரு சர்வகலாசாலையில் சேர்ந்து மாணவிகள் தங்குவதற்காக உள்ள பாஸ்போர்ட்டைப் பெற்று, அமெரிக்காவிலேயே இருக்கும்படி அதிகாரிகள் யோசனை கூறியிருக்கின்றனர்.

தண்ணீரைக் கொண்டே சப்மரீனை ஓட்டலாம்!

பாரிஸ், ஏப். 25—

எந் லோவிசக் என்னவர் தண்ணீரைக்கொண்டு சப்மரீனை ஓடும்படி செய்ய ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார். இவர் இவ்விஷயமாக ஆராய்ச்சிகளை நடத்த, பிரெஞ்சு கடற்படை காரியாலயத்தினர் இவருக்கு வசதிகளெல்லாம் செய்து கொடுத்திருக்கின்றனர்.

இதே முறையில் மோட்டார், கார், ரயில்வே எஞ்ஜின் முதலியவைகளையும் தண்ணீரிலேயே ஓட்டச்செய்யமுடியும் என்று அவர் கூறுகிறார். —ரேட

கார்களில் மஞ்சல் போர்டு மாட்டுக!

லண்டன், ஏப். 25

ஜெகோஸ்லாவியாவிலுள்ள அயல்நாட்டு ஸ்தானீகர்கள் தங்கள் கார்களின்பு மஞ்சல் நிறமுள்ள லைட்களின் போர்டை மாட்டவைக்க வேண்டுமென்று, ஜெக் சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறது. ஹிட்லர் யூதர்களை அடையாளம் தெரிந்துகொள்ள இதுமாதிரி மஞ்சள் போர்டை மாட்டும்படி முன்பு உத்திரவு பிறப்பித்திருந்தது நினைவிருக்கலாம் என்றது, இன்னும் பட்டாங்களில் எடுத்துக் காட்டப்படுகிறது.

க்ஷயவியாதியால் கருதரிப்பது தடைபடாது

லண்டன், ஏப். 25—

க்ஷய வைத்திய நிபுணரான டாக்டர் எம். மிட்ஷிடர்வா என்பவர் ஒரு பெண்ணுக்கு க்ஷயவியாதி இருப்பதால் கருதரிக்காமல் போய்விடாது என்றும், அந்தப் பெண் தயாராகும் பட்சத்தில் இந்த வியாதி சொஸ்தமாக வழியுண்டு என்றும் கூறுகிறார்.

க்ஷயரோகமுள்ள 718 பெண்களை இவர் பரீட்சை செய்து பார்த்திருக்கிறார்.

தொழில் துறை தகராறுகள்

ஜனவரித் தொழிலில் வேலை நேரம் வீணாகிவிட்டதாம்

1950 பிப்ரவரியில் தொழில் துறைத் தகராறுகள் முந்தின மாதத்தை விடக் குறைந்துவிட்டிருந்தாலும், அவைகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளரின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டிருக்கிறது. ஆனால் வேலை செய்வதற்குரிய ஆள்-நாள் நேரம் அதிகமாய் நஷ்டமாகிவிட்டிருக்கிறது. தொழிலாளர் காரியாலயம் வெளியிட்டுள்ள தற்காலிகப் புள்ளி விவரங்களின்படி ஜனவரியில் 100 தகராறுகள் ஏற்பட்டதற்கு மாறாக பிப்ரவரியில் 86 தகராறுகள் தான் ஏற்பட்டிருந்தன என்று தெரிகிறது. இவைகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் ஜனவரியில் 76,000 ஆக இருந்தது பிப்ரவரியில் 45,000 ஆகக் குறைந்துவிட்டது. ஆனால், வேலை நேர நஷ்டம் ஜனவரியில் 2·3 லட்சம் ஆள்-நாளாக இருந்தது பிப்ரவரியில் 3·4 லட்சம் ஆள்-நாளாக அதிகரித்துவிட்டது. 1949 ல் இதற்குச் சரியான மாதத்தில் தகராறுகளின் எண்ணிக்கையும் ஆள்-நாள் வேலை நேர நஷ்டமும் இவைகளை விட மிகவும் குறைவுதான்.

பிப்ரவரியில் ஏற்பட்ட 86 தகராறுகளில் 35,000 தொழிலாளர் சம்பந்தப்பட்ட 65 தகராறுகள் புதிய தகராறுகள். 13,000 தொழிலாளரைப் பாதித்த 13 கதவடைப்புகள் காரணமாக 2,2?,000 ஆள்-நாள் வேலை நேரம் நஷ்டமாகிவிட்டது.

பம்பாயில், 22,000 தொழிலாளர் சம்பந்தப்பட்ட 34 தகராறுகள் ஏற்பட்டு 1·8 லட்சம் ஆள்-நாள் வேலை நேரம் நஷ்டப்பட்டது. இவைகளில் 3 தகராறுகள் கதவடைப்பு ரீதியில் ஏற்பட்டன; 8,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்; 15 லட்சம் ஆள்-நாள் வேலை நேரம் நஷ்டப்பட்டது. மேற்கு வங்காளத்தில், 8,000 தொழிலாளர் சம்பந்தப்பட்டதும், 96 000 ஆள்-நாள் வேலை நேர நஷ்டத்துக்குக் காரணமாயிருந்ததுமான 20 தகராறுகள் ஏற்பட்டன, இவைகளில் 9 தகராறுகள் கதவடைப்பாக இருந்தன; 4,500 தொழிலாளர் பாதிக்கப்பட்டனர்; 61,000 ஆள்-நாள் வேலை நேரம் நஷ்டப்பட்டது.

பிரஸ்தாப மாதத்தில் நெசவாலைகளில் வேலை நேர நஷ்டம் அதிகமாயிருக்கிறது; பஞ்சாலைகளில் 81 தகராறுகளும், சணல் ஆலைகளில் 2 தகராறுகளும், இதர ஆலைகளில் 7 தகராறுகளும் ஏற்பட்டன. 2,12,000 ஆள்-நாள் வேலை நேர நஷ்டத்துக்கு இத்தொழில் மட்டுமே காரணமாக இருந்திருக்கிறது. இதில் 1,73,000 ஆள்-நாள் வேலை நேரம் கதவடைப்புகள் காரணமாக நஷ்டப்பட்டது; பஞ்சாலைகளில் 3, சணல் ஆலைகளில் 1, இதர நெசவாலைகளில் 3 கதவடைப்புகள் ஏற்பட்டன.

230 சதவிகிதம் தொழிலாளர் சம்பந்தப்பட்டிருந்த 23 தகராறுகளில், அதிகப்படியான அலவன்ஸ், கூலிகள், போனஸ் நஷ்டகொடைகள் முதலிய கோரிக்கைகள் காரணமாக ஏற்பட்ட தகராறுகள் வேலை நேர நஷ்டத்தில் 1?.3 சதவிகிதத்துக்கு ஏதுவாக இருந்தன. 31.8 சதவிகிதம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்த இருபத்து மூன்று தகராறுகள் ஆள் குறைப்பு அல்லது அதிகாரம் பெற்ற சிப்பந்தித் தகராறுகளாக இருந்தன; அவை வேலை நேர நஷ்டத்தில் 25.8 சதவிகிதத்துக்கு ஏதுவாக இருந்தன.

முதலாளித்வத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் போடுகிறார் ட்ரூமன்

இவை, சிந்திக்க வேண்டிய விஷயங்கள். நாட்டை வலதுசாரிகள் மயமாக்கிவிடமாட்டோம் என்று சாகச மொழிபேசும் ட்ரூமன் தான், டாலர் உதவி அளிப்பதன் மூலம், மற்ற நாடுகளனைத்தையும் வலதுசாரி நாடுகளாக்க முயலுகிறார்!

இடதுசாரிகள் சிலருக்கு ஆட்சியில் இடமளித்துவிட்ட ஒரே காரணத்தால், வலதுசாரிகளுக்கு வாழ்வளிக்கப்படவில்லை என்று மக்கள் கருதுவர் என்பது தோழர் ட்ரூமன் கருத்துபோலும்!

இங்ஙனம் சாகசம், பித்தலாட்டம் ஆகியவற்றில் அமெரிக்கத் தலைவர் கொண்டுள்ள பற்றும், ஆர்வமும் உலக சமாதானத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. மற்ற நாடுகளுக்கு உதவுவதை ஜனநாயகம் என்று உலகை நம்பவைத்து, அதன் மூலம் ரஷியாவுக்கு எதிராக ஒரு போர் முகாம் அமைக்கப் பார்க்கிறார்! இதனை ரஷியா உணராது என்பது அவரது நினைப்பு போலும்.

இவ்வாறெல்லாம் கம்யூனிசத்துக்கு விரோதச் சக்திகளையெல்லாம் திரட்டுவதோடு மட்டுமா நின்றுவிட்டது அமெரிக்கா, இல்லை; ரஷிய எல்லைக்குத் தனது போர்விமானத்தை அனுப்பி, ரஷியாவை நாடி பரீட்சையும் செய்து பார்த்திருக்கிறது. அதுதான் அண்மையில் நடைபெற்ற லாட்வியா விமானப் போராட்டம்.

இங்ஙனம், பல வகைகளிலும் வம்பை விலைக்கு வாங்கும் அமெரிக்காதான், இன்று தனது பொல்லாத போக்கிற்கு ஜனநாயகம் மூலாம்பூசுகிறது. பூசட்டும்; அதன் விளைவுகளை விரைவில் அறுவடை செய்யும் காலம் வந்தே தீரும்.

இனி நடப்பவை

கடையநல்லூர்:- தி. மு. க. சார்பாக, 27 4-50 அன்று மாலை மார்க்கட் பக்கமுள்ள "மனோன்மணி" மைதானத்தில் கோவில்பட்டி ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் க. அன்பழகன், எம். எஸ். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஆணி :— 29—4—50 மாலை சொசப்பாளையம் தர்மராசா கோவில் மைதானத்தில் தி. மு. க. சார்பாக ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றுவார்.

* * *

சங்கரநயினார்கோவில்:- திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம், 28—4—50 மாலை திருவேங்கடம் சாலைத்தெரு வள்ளுவர் திடலில் நடைபெறும். தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து தலைமை தாங்குவார். தோழர்கள் க. அன்பழகன், எம். எஸ். இராமசாமி, எஸ். கலிங்கன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சேரம்பூர், செங்கோட்டைப்பட்டி:— 28—4—50 அன்று மிர்பகல் ஷைபூர் நாட்டாண்மைக் கழகப் பள்ளிகளின் சார்பாக ஓர் விளையாட்டு விழா பெரிய பண்ணை பெருமாள் செட்டியார் மைதானத்தில் தோழர் எஸ். கே. முத்தையா பி. ஏ. பி. டி. அவர்கள் தலைமையின்கீழ் நடைபெறும்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு		1115—11—0
வித்வான் கா. சந்திரசேகரன், சிவஞானபுரம்		2—0—0
இ. கத்தான்,	நிக்கோட்டை	10—0 0
கே. கண்ணன்,	புதுவை	5—0—0
க விசயராசன்,	அருப்புக்கோட்டை	1—0—0
ம. திபாகரசன்,	வெள்ளினிப்பட்டி	2—0—0
தி ச குழந்தைவேலன்.	உறையூர்	2-0—0
"மாணவர்விடுதி" மாணவர்கள், கொடுமுடி		5—0—0
அ. சங்கரலிங்கம்,	மதுரை	3—0-0
எஸ். சீனிமுகம்மது,	,,	2-0—0
எம். குருசாமி,	,,	2—0-0
பெ. கோபால்,	,,	1—0—0
ஜெம்புலிங்கம்,	,,	1—0 0
அ சி. கந்தசாமி,	,,	1—0—0
பா. ஜாபர் உசேன்.	பொள்ளாச்சி	1—0—0
பி ஏ. நாச்சிமுத்து,	,,	1—0 0
ச. கந்தசாமி,	,,	1—0—0
கோ. கோபால்,	,,	1—0—0
அ. ச. பாலு,	,,	1—0—0
எம். சாமியப்பன்,	,,	10 0-0
தி. கி. செங்கோடன், திருச்செங்கோடு		2 0-0
பி சின்னப்பா, பெங்களூர்		10—0 0
பி. ஏ. வீரபத்திரய்யா, சேலம்		51 0—0
கே. எஸ், முனுசாமி, அரிசிபாளையம்		2—0—0
சாமிநாதன், சேலம்		1—0-0
தி மு. க. சேலம் பொன்னம்மாப்பேட்டை கிளை		100 0—0
		1333—11 0

கட்டிட நிதி

தி. மு. கழகக் கட்டிட நிதிக்கு நன்கொடை அனுப்புவோர், கீழ்கண்டவாறு முகவரியிட்டு அனுப்பவேண்டுகிறேன்.

சி. என். அண்ணாதுரை
2/45 முத்துமாரி செட்டி தெரு,
மண்ணடி, சென்னை—1.

போர்க்கப்பலில் சிகரெட்டுகள் திருட்டு

லண்டன், ஏப். 25—

பிரிட்டிஷ் யுத்தக்கப்பலிலிருந்து 18500 சிகரெட்டுகள் களவாடப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறதென்றும், ஒரு யுத்தக்கப்பலில் இம்மாதிரித் திருட்டு இதுவரை நடந்ததேயில்லை என்றும் கூறப்படுகிறது.

தோழர் க. அன்பழகன்

தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் 26-4-50 இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு கீழ்க்கண்டவாறு சுற்றுப்பயணம் செய்வார்கள்

தி. மு. க. பொதுக்கூட்டங்கள்

27—4—50 வியாழன்
கடையநல்லூர்

28—வெள்ளி
சங்கரநயினார்கோயில்

29—சனி
ஆண்டிப்பட்டி
(சோழவந்தான்)

30—ஞாயிறு
பொள்ளாச்சி
தமிழர் மறுமலர்ச்சி மன்றத் துவக்க விழா

1—5—50 திங்கள்
பொன்மலை தி. வாலிபர் கழகம் மே தினம்

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

27-4-50

கடையநல்லூர் :—வள்ளிமுத்து. க. அன்பழகன் எம். ஏ., இராமசாமி

மங்கநல்லூர் :—சி. பி. சிற்றரசு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வை. மாணிக்கம்

28-4-50

மேட்டுப்பாளையம்:—(தஞ்சைமாவட்டம்) சி. பி. சிற்றரசு

சங்கரநயினார்கோவில் :— ஈ. வே. அ. வள்ளிமுத்து. க. அன்பழகன், எம். எஸ். இராமசாமி, எஸ். கலிங்கன்.

1-5-50

மே விழாக் கூட்டங்கள்

சென்னை :—சி. என். அண்ணாத்துரை

மதுரை :—அ. சிதம்பரம்

கோவை :—இரா. நெடுஞ்செழியன்

பொன்மலை :—க. அன்பழகன், டி. கே. சீனிவாசன்

கோவில்பட்டி :—ஆசைத்தம்பி

★ நாட்டு நடப்பு ★

வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

செயங்கொண்டம், ஏப். 21—

தோழர் பாவசா அவர்கள் இல்லத்தில் தி. மு. க. வள்ளுவர் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் 16 4-50 அன்று தோழர் வை. இராசகோபால் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் இராமச்சந்திரன், இராமசாமி, நாகராசகாசா உசேன், விசுவநாதன் முதலியோர் திராவிடம் பிரிவது அவசியமா என்னும் பொருள் பற்றிப் பேசினர்.

திருவள்ளுவர் கழகம்

சின்னதாராபுரம், ஏப். 20

13—4—50 அன்று மாலை தோழர் என். சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

அதுபொழுது கரூர் நகராண்மைக் கழகத் தலைமைத் தமிழ்ப் புலவர் தோழர் வித்வான் ஏகுசாமி அவர்கள், திருக்குறளும் விஞ்ஞான ஆராய்ச்சியும், மற்றும் திருக்குறளின் பெருமைகளைப் பற்றியும் அழகாக எடுத்துரைத்தார்.

தோழர் கே. ஆறுமுகம் அவர்கள் திருக்குறள் செய்யுட்கள் பல வற்றிற்குஉரைகூறி, மக்களை மகிழ்வித்தார். செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

வாரந்தோறும் திருக்குறள் வகுப்பு ஒன்று நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. கிராமதல அதிகாரி தோழர் கே. ஆறுமுகம், வகுப்பிற்கு ஆசிரியராய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றிகூறுதலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

பிரசாரப் பயிற்சிக் கழகம்

அருப்புக்கோட்டை, ஏப். 13—

இக்கழக அமைப்புக் கூட்டம் 11—4—50-ல் ஆர். எஸ். மணி தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்-ஏ. சண்முகம், கோ. கருப்பசாமி உபதலைவர்-ச. சோமசுந்தரம், நடராசன் செயலாளர் ஆ. சுப்பிரமணியம் பொருள் உறுப்பினர். தோழர்கள் சங்கரலிங்கம், ச. வீராசாமி ஆகியோர் நிர்வாக உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேநீர் விருந்து மிகச் சிறப்பாக நடைபெற்றது. முடிவாக செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

சொற்பயிற்சிக் கழகம்

குளூர், ஏப். 20—

16-4-50 இரவு தோழர் எஸ். இராமசாமி தலைமையில் "குடிசைத் தொழிலும் இயந்திரத்தொழிலும்" என்ற தலைப்பில், உறுப்பினர் பலர் குடிசைத் தொழிலால் காலமும் வேலையும்தான் வீணாகும், பொருள் அதிகம் உற்பத்தியாகாது என்றும், இயந்திரத் தொழிலால் காலமும், பொருளும் அதிகம் உற்பத்தியாகும் என்றும் நாமே வீணும் பொருளாதாரத்துறையில் முன்னேறவேண்டுமானால் இயந்திரத்தொழில் அதிகமாகவிருக்கவேண்டும் என்றுபேசினபின், தோழர் அருணாசலம் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

மு. இ. ஆ. இ. பாடசாலை

வண்ணமம்பதி, ஏப். 17—

முதியோர் இளைஞர் ஆரம்ப இரவு 8-4-50-ல் செயற்குழுக் கூட்டம், தோழர் எம். தங்கவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மன்றத்திற்கு கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் திருவேங்கட நாயகர், ராமானந்தம் ஆகியோர் மன்றத்திற்குக் காப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் எம். ஜி. தங்கவேல், உபதலைவர் என். எச். சுப்ரமணியம், செயலாளர்-பி. முனுசாமி, துணைச் செயலாளர்-வி. மூடேசன், பொருளர் ஏ. ஆரோக்கியதாஸ். மற்றும் 7 பேர்கள் கொண்ட ஒரு செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவர் அவர்களால் முடிவுரைகூறகூட்டம்முடிவுற்றது.

உப்பு தொ சங்கம்

தூத்துக்குடி, ஏப். 7—

5—4—50 மாலைஉப்புத் தொழிலாளர் சங்கத்தின் 50-ம் ஆண்டு உறுப்பினர்கள் தேர்தல் கூட்டம், சங்கத் தலைவர் தோழர் கே.வி.கே. சாமி தலைமையில் விவிஞ்சிபுரம் மூதல் பாராபக்கமுள்ள மைதானத்தில் நடைபெற்றது. அதுபோது தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் சென்ற ஆண்டில் தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்க முதலாளிகள் செய்த சூழ்ச்சிகளையும் தொழிலாளர்களின் குறைபாடுகளைப்பற்றியும், சென்ற ஆண்டில் பணிபுரிந்த நிர்வாகஸ்தர்களின் திறமையையும் பாராட்டிப் பேசினார்.

நீண்டநேர கைதட்டலுடன், தோழர் கே. வி. கே. சாமியால் கொண்டுவரப்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலைவர் நன்றிகூறலுடன் கூட்டம் முடிந்தது.

கூ. ப. வெ. உ கழகம்

விளாத்திகுளம், ஏப். 24—

விளாத்திகுளம் கூட்டுறவு பனை உற்பத்தியாளர் கழகக் கூட்டம் 20-4-50-ல் திருநெல்வேலி தனி டெவலப்மெண்ட் இலாகாவின் சார்பில், தோழர் ஜனாப் அப்துல் ரஹ்மான் சாஹேப் பகதூர் அவர்கள் முன்னிலையில் நவீன முறையில் கருப்புக்கட்டி தயாரித்துக் காண்பிக்கப்பட்டது. பனைத்தொழிலாளர்களும் பொதுமக்களும் கண்டு வியந்து உற்சாகமடைந்தனர்.

நவீன முறையில் கருப்புக்கட்டி தயாரிப்பு, போதனாசிரியர் சித்திரபுத்திரன் அவர்கள் இம்முறையை விவரமாக எடுத்துரைத்தார்.

தோழர் சம்பந்தம் இந்த ஜில்லாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள 390 கருப்புக்கட்டி சங்கங்களின்வேலைகளையும், மற்றும் தனி டெவலப்மெண்ட் டிபார்ட்மெண்ட்டார் செய்துவரும் மற்ற அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றிக் கூறினார்.

தோழர் வெங்கடாசாரியார் அவர்கள் இந்தப் புதிய முறை கருப்புக்கட்டியால் சர்க்கரைப் பஞ்சத்தைத் தீர்க்கலாம் என்றும், இந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். செயலாளர் ராஜா வேதநாயகம் நன்றி கூறினார்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம்

வில்லிபுத்தூர், ஏப். 12—

சங்கத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழா 10-4-50 அன்று மாலை தி. மு. கழக அலுவலக முன்னால் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

இவ்வூர் நெசவாளர்கள் போதுமான நூலும், கூலியும் கிடைக்காமல் பட்டினியால் வாடுவதாலும், அநேக நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேருவதற்கும் பணவசதி இல்லாதிருப்பதாலும் இந்நகருக்கு சென்னை சர்க்காரால் தீர்மானிக்கப்பட்ட நிவாரணம். (அதாவது ஏழைத்தறிகாரர்களுக்கு கூட்டுறவு சங்கத்தில் சேருவதற்கு பணம் கடன் கொடுப்பது, நெசவு செய்த ஜவுளிகளை ஒரு குறிப்பிட்ட கூலி கொடுத்து நம் சர்க்காரே எடுத்துக்கொள்வது)

என்ற திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமாறு ஏற்கனவே பலதடவைகளும் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்ததும் இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை. ஆகையால் உடனடியாக மேற்படி நிவாரணத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும், நெல்லை ஜில்லாவில் தறிகாரர் ஒருவருக்கு 1 வாரத்திற்கு 2-8-0 முதல் 3 ரூபாய்வரை பஞ்சநிவாரணமாக அளித்துவருவதைப் போல் இவ்வூர் நெசவாளர்களுக்கும் மேற்படி நிவாரணம் அளிக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பெற. தோழர்கள் சி. செல்வப்பிரகாசம், மா. குருசாமி, ஷ. சிவசாமிநாதன், மா. சிவஞானம் ஆகியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். செயலாளர் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

சோம்பேறிக்கு சிறை!

லண்டன், ஏப். 25—

வேலை செய்ய இஷ்டமில்லாத ஆர்தர் சான்லே என்பவருக்கு மார்க்ஷயர் கோர்ட் 6 மாத சிறை தண்டனை விதித்திருக்கிறது.

வேலை செய்து தன்னையும் தன் மனைவி மக்களையும் காப்பாற்றிக் கொள்ளவில்லை என்பதே அவர் மீதுள்ள குற்றச்சாட்டு.

இம்மாதிரி சோம்பேறித்தனத்திற்காக சிறைக்கு அனுப்பப்படுவது பிரிட்டிஷ் சரித்திரத்திலேயே இது தான் முதல் தடவை.

1948 ஜூலை 28-ந் தேதி முதல் 1950 பிப்ரவரி 28-ந் தேதி வரையில் இவருக்கும் இவர் குடும்பத்தினருக்கும் போணிக்காக தேசிய உதவி போர்டினிடமிருந்து ரூபாய் 1932 உதவி கிடைத்திருக்கிறதென்றும் இதற்கு முன் ஏழைகளுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவியை இவர்கள் பெற்று வந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இவர் படுக்கையைவிட்டு வேலைக்குச் செல்லக்கூட எழுந்திருக்க மாட்டார் என்று இவருடைய மனைவி கூறுகிறார்.

ஸ்டர்லிங் கடனை தீர்க்க டாலர் உதவி

லண்டன், ஏப். 25—

இந்தியா, பாகிஸ்தான், எகிப்து முதலிய நாடுகளுக்கு ஸ்டர்லிங் கடனைத் தீர்க்க அந்நாடுகளுக்கு டாலர் உதவி செய்து கடனைத் தீர்ப்பதில் யு. எஸ். உதவி செய்யவேண்டுமென்ற ஒரு நகல் திட்டம், வாஷிங்டன் வந்து சேர்ந்துவிட்டதாகவும் இதை சில பெரிய யு. எஸ். அதிகாரிகள் ஆதரிப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

இதைப்பற்றி முடிவுசெய்யு முன் கடன் கொடுத்த நாடுகளும் கலந்தாலோசிக்கப்படும்.

லண்டனிலுள்ள சில இந்திய பாகிஸ்தான் பொருளாதார நிபுணர்கள், பிரிட்டனின் ஸ்டர்லிங் கடனை அடியோடு தீர்ப்பதைக் [illegible] அளவுக்கு கூட அமெரிக்க முன்வராது என்று கூறுகின்றனர்.

எவ்வித 'முன்னணுக்கமும்' போட்டு இருக்கும் எண்ணமில்லாமலேயே அமெரிக்கா இந்த உதவியைச்செய்ய முன்வரும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்

ரஷ்ய ரேடியோவின் ரகசிய பிரசாரம்!

இலங்கையில் 39 ரேடியோ செட்கள் பறிமுதல்

கொழும்பு, ஏப். 25—

ரஷ்ய ரேடியோ ஒலிபரப்புகளை இரகசியமாக கேட்க இலங்கையில் ஏற்பாடுகளிருப்பது பற்றி தெரியவந்த பின்பேரில், திடீரென்று ஏப்ரல் 21-ந் தேதி இரவில் சோதனையிட்டதில் 39 ரேடியோ செட்கள் கைப்பற்றப்பட்டன.

கொழும்பில் ரஷ்ய ஒலிபரப்புகளை நன்றாகக் கேட்கச் செய்ய என்னசெய்யவேண்டுமென்ற தகவல்கள் அடங்கிய ரஷ்யாவிலிருந்து வந்த ஒரு போஸ்ட்கார்ட் தபால் அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதின் பேரில், இத் தகவல் தெரியவந்ததாம். —ருனைாக்

யாழ்ப்பாணம் நகரசபைமீது தமிழரசுக்கட்சி வழக்கு

ஜனவரி மாதம் 23-ந்தேதியன்று தமிழரசுக் கட்சியினரின் கூட்டமொன்றை நடத்துவதற்கு, யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தைக் கொடுக்கவென ஒப்புக்கொண்டு, பின் அவ்வுத்தரவை ரத்து செய்துவிட்டதால் 2010 ரூபாய் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென யாழ்ப்பாண டிஸ்டிரிக் கோர்ட்டில் யாழ்ப்பாண முனிசிபல்சபைமீது தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஆறு அங்கத்தினர்கள் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

தோழர் வன்னியசிங்கம் எம். பி. கட்சித் தலைவரான தோழர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி. கேவி கட்சியின் கூட்டுக்காரியதரிசியான செனட்டர் ஈ. எம். வி. நாகநாதன், தோழர் வி. நவரத்தினம் புரக்டர், கட்சியின் கூட்டுக் காரியதரிசி என டாக்டர் கம். தோழர் பி. என். வி. பிள்ளை ஆகியோரே வழக்காளிகள், தமிழரசு கட்சியின் சார்பாக வழக்காளிகள் யாழ்ப்பாண முனிசிபல்சபையின் மீது வழக்குத் தொடர அனுமதியளிக்க வேண்டுமென தோழர் என். நடராசாவின் ஆதரவுடன் வழக்கறிஞர் தோழர் பி. நவரத்தினராசா யாழ்ப்பாண மேலதிக டிஸ்டிரிக் நீதிபதி திருகுணம் ஸ்பென்சரின் முன்னிலையில் ஒரு மனுவை சமர்ப்பித்தார். நீதிபதி மனுவை ஏற்று வழக்குத் தொடர அனுமதியளித்தார். இந்த வழக்கைப்பற்றிய அறிவிப்பு பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படவேண்டுமெனவும், அவ்விதவிளம்பரங்களைக் கோர்ட்டில் தாக்கல் செய்தபின் நகரசபைக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டுமெனவும் அவர் உத்தரவிட்டார்.

கூட்ஸ் வண்டி கவிழ்ந்தது

ஜப்பல்பூரிலிருந்து பிரோச்சிக்குப் போய்க்கொண்டிருந்த ஒரு கூட்ஸ் வண்டியின் 12 பெட்டிகள் அலகாபாத்திலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள சங்கர்கருக்கருகே நேற்றிரவு சுமார் 8-15 மணிக்கு பாதையைவிட்டிறங்கி விட்டது. இதனால் நேற்றிரவு 8-55 மணிக்கு இங்குவந்து சேர வேண்டிய பம்பாய் மெயில் இன்னும் வந்து சேரவில்லை. இந்த மெயில் கான்பூர் வழியாக மாற்றப்பட்டது. இன்று காலை வரவேண்டிய பம்பாய் எக்ஸ்பிரசும் வரவில்லை.

32-ஆண்டுகள் தூங்கிய மங்கை!

முப்பத்திரெண்டு ஆண்டுகள் தொடர்ந்து தூங்கிய மிஸ் காரோலைன் கார்ல்சென், ஸ்வீடனிலுள்ள ஓக்ஜு என்னுமிடத்தில் இறந்துவிட்டார். இறக்கும்போது அவளுக்கு வயது 88. அவள் 13 வயதாக இருக்கும்போது அதாவது 1876-ம் ஆண்டு தூங்க ஆரம்பித்தார். அவளுடைய தாயார் தனது மகள் ஏதோ அலுப்பாக இருக்கிறாள் என்ற நினைப்புடன் தூங்கவிட்டார். ஆனால் மிஸ் காரோலைன் விழிப்பதாகவே இல்லை. ஒரே தூக்கம். முப்பத்திரெண்டு ஆண்டுகள் தொடர்ந்து தூங்கினாள் இடையில் எழுந்திருக்கவே இல்லை. கடைசியில் 1908-ம் ஆண்டுதான் அவள் விழித்தாளாம். மிஸ் காரோலைன் தனது வாழ்நாள் முழுதும் நல்ல ஆரோக்கியத்துடனேயே இருந்தாளாம்.

கனடாவுக்கு டெலிவிஷன்

ஆட்டவா, ஏப். 25—

கனடாவுக்கு டெலிவிஷன் செட் சப்ளை செய்யும் காண்டிரேக்டை, பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று பெற்றிருக்கிறது. கனடாவில் இதுவரை டெலிவிஷன் ஸ்டுடியோக்கள் எதுவும் கிடையாது.

நாகர்கோயில் தோழர்கட்கு

"அன்புடையீர், 21 4-50ல் நான் நாகர்கோயில் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக 20-ந் தேதி புறப்பட்டுங்கூட, திருச்சியில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் தொடர்பில்லாமல் தூத்துக்குடி எக்ஸ்பிரசில் வர நேரிட்டு, மாலை 5-மணிக்கு திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயில் கூட்டத்தில் கலந்துகொள்ள எந்தவித போக்குவரத்து வசதியும் கிடைக்காமல், நெல்லையிலிருந்து திரும்ப நேரிட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என, தோழர் மு. கருணாநிதி அவர்கள் நாகர்கோயில் தோழர்களுக்கு இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறார்.

தீ மிதி விழா!

களம்பூர், ஏப், 16—

23—4—50 இவ்வூர்க்கருகே ஒரு மைல் தூரத்தில் உள்ள ஸ்தம்பாடி கிராமத்தில் சுமார் 40 நாட்களாக மகா பாரதம் சொல்லப்பட்டு 23—4—50 ஞாயிற்றுக்கிழமை தினம் தீமிதிக்கும் திருவிழா நடைபெற்றதில், உள்ளூர் வாலிபர் ஒருவர் ராஜ நாயுடு குமாரத்தியும், இதுபோன்ற சகுனம், கிராம வாசியான ஒரு ஆணுக்கும், மற்றொரு பெண்ணுக்கும். மலர்ந்த காயங்கள் நெருப்பில் விழுந்ததால் ஏற்பட்டுள்ளது. நெருப்பில் விழுந்தவர்களைத் தூக்கியெடுக்கக்கூட அஞ்சிவிட்டார்கள் திருவிழாவிற்கு வந்திருந்த மக்கள் 'அம்மனிடம் சக்தி இல்லை என்றும், இந்தக் காலத்தில் இவைகள் எல்லாம் தகுதியற்றவைகள், அநாகரிகத்தனம்' என்று சொல்லிக்கொண்டு பேசிக்கொண்டு போனார்கள். மூன்று பேர் நிலைமையும் கவலைக்கிடமாக இருக்கிறதெனத் தெரிய வருகிறது. [ஒ. கி]

நினைவூட்டுகிறோம்!

கழக சம்பந்தமான செய்திகளடங்கிய கடிதங்களையும், ஆசிரியருக்கு எழுதும் கடிதங்களும் ஆசிரியர் 'மாலை மணி' என்றும், பத்திரிகை சந்தா, ஏஜென்சி சம்பந்தப்பட்ட கடிதங்களை மானேஜர் 'மாலை மணி' என்ற முகவரியிட்டு அனுப்புமாறு கோருகிறோம்.

மானேஜர்

திருமணம்

சென்னை செம்பியம் பெரிய கொடுக்கைபூர் சி. எம். எம் பாடசாலை தெருவில், 22 செ. இல்லத்தில் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் தோழர் கே. சி. துரைவேலுக்கும், தோழியர் மனோரஞ்சிதம் அம்மைக்கும் தோழர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையில் 27—4—50 அன்று திருமணம் நடைபெறும்.

திருத்தம்

12—4—50 மாலைமணியில் "கட்டிட நிதி என்ற தலைப்பில் செல்வத்துரை நாவல்குடி இலங்கை என்றிருப்பதை சி. செல்வத்துரை நாவற்காடு அச்சுவேலி இலங்கை என, திருத்திக்கொள்ளவும்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street Madras-1.